[2022 மே 9

காவல் துணைக் கண்காணிப்பாளர்களாகவும் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. அதுபோன்று அமைச்சுப் பணியாளர்களுக்கும் உதவியாளர் முதல் முதுநிலை நிர்வாக அலுவலர்கள் பதவி வரை பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

"உங்கள் துறையில் முதலமைச்சர் திட்டத்தின்" கீழ் காவலர் குறைதீர்க்கும் கூட்டம் மாவட்டம், சரகம், மண்டலம் மற்றும் மாநில அளவில் நடத்தப்பட்டது. அதில் 3056 மனுக்கள் பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

"சிறு தண்டனைகள் இரத்து செய்யப்படும்" என்ற அறிவிப்பின் படி, காவல் ஆளிநர்களுக்கு எதிரான 1926 சிறு தண்டனைகள் அவர்கள் வருங்காலத்தில் பதவி உயர்வு பெறும் பொருட்டு இரத்து செய்யப்பட்டன.

காவல் நிர்வாகத்தில் சீர்திருத்தம் செய்யும் முயற்சியாக வெளிப்படைத்தன்மையைக் கொணரும் வகையில் காவல் ஆளிநர்கள் மற்றும் கீழ் நிலை பணியாளர்களின் பணி விவரங்கள் மற்றும் ஆண்டு மேம்பாட்டுத்திறன் அறிக்கைகளைக் கணினிமயமாக்கல் செய்யப்பட்டு வருகிறது.

காவல் ஆணையம்

கடந்த ஆண்டு சட்டப் பேரவையில் மானியக் கோரிக்கையின்போது அறிவித்ததற்கிணங்க காவலர்–பொதுமக்களுக்கிடையேயான உறவை மேம்படுத்தவும், காவல் துறை பணியாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டும், அவர்களுக்குத் தேவையான திட்டங்களையும், புதிய பயிற்சி முறைகளையும் பரிந்துரைக்கும் நோக்கத்துடன் ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற மாண்புமிகு நீதியரசர் திரு. C.T. செல்வம் அவர்களது தலைமையில் ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட ஐந்தாவது காவல் ஆணையம் (Fifth Police Commission) ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

XI. காவல் துறை கட்டடங்கள் மற்றும் காவலர்களுக்கான வீட்டு வசதி

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகமானது காவலர்களுக்கு வீடுகள் கட்டித்தரும் முக்கிய குறிக்கோளோடு நிறுவப்பட்டது. அதன்பிறகு பல்வேறு காலகட்டங்களில் காவலர் வாடகை குடியிருப்புகள், காவல் நிலையங்கள் மற்றும் இதர காவல்